முருகப்பெருமான் துணை

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.02.2023, வெள்ளிக்கிழமை

1. சிவஞான குருவே அரங்கா
   சித்திமிகு வரம் பெற்ற தேசிகா
   அவதாரம் ஆறுமுகனார் சூட்சும
   அறமாக வந்தருளும் ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சுபகிருது கலைதிங்கள்
   இனிமைபட இருபானேழ்திகதி புகர் வாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் 26 ம் நாள் 10.02.2023, வெள்ளிக்கிழமை)
   இயம்பிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை ஐயடிகள்காடவர்கோன் யானும்
   அகிலமே உயர்வுபெற உரைப்பேன்
   ஆசிதந்து நல்வரமும் தந்து
   அகிலத்தார் வினை களைவேன் என
4. என அருளும் அரங்கமகான்
   எளிய தரும ஞான வழியை
   ஞானமாக ஏற்று வந்திட
   ஞானவாழ்வு பெறுவது உறுதி
5. உறுதிதந்து அருளும் ஞானி
   உண்மை கொண்ட வழிகளை
   கருதிவந்து உலகோர் பற்றி
   காப்பாயென தொடர்ந்து வர
6. வருகவே அரங்க மகான்தன்
   வல்லமைமிக தவ தரும பலம்
   வருமுலகில் பேராற்றல் ஆகமாறி
   வாழும் காலமெல்லாம் துணையாக மாறும்
7. மாறுதல் கண்டிட மக்களிடை
   மறுமை வெல்லும் அறிவும்
   ஆறுமுகனாரை வழிபடுகின்றநல்
   அறிவுத் தெளிவும் கூடி இனிதே
8. இனிதே உலகமாற்றம் செய்யும்
   எல்லாத் தகுதியும் வல்லமையும்
   கனிவேலவன் அனுகூலமாக
   கருணைபட வாழ்ந்து அடைவர்
9. அடைவரே அரங்கமகானின்
   ஆற்றல் மிக்க தொண்டர்களாகி
   தடையற ஞான பலம் கூடி
   தலைமைகளை தேர்வு செய்யும்

10. தேர்வு செய்யும் மேலவர்களாக
தேசம் காக்கும் உத்தமர்களா
தேர்வு பெற்று அரங்கன் வழி
தேசம் தனில் ஞானத்தலைமை

11. தலைமை படைத்து இனிதே
தணிகாசலன் ஆசிஅருள் பெற்ற
தலைமையாக ஞான ஆட்சிபடைப்பர்
தாமுரைத்த அனுகூல ஆசிமுற்றே

—சுபம்—